செ. கு. எண்: 162 நாள் :27.11.2015

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 27.11.2015

26.11.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், கிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாவாடை என்பவரின் மகன் பெருமாள் செஞ்சி பேரூராட்சி அலுவலகம் அருகே மின்சாரம் தாக்கியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்; இந்த சம்பவத்தில் திரு. பன்னீர்செல்வம் மற்றும் திரு. விஜயமணி ஆகிய இருவரும் பலத்த காயமடைந்துள்ளனர் என்ற செய்தியையும்;

சென்னை, ஷெனாய் நகர், கஜலட்சுமி காலனியைச் சேர்ந்த திரு திரவியம் என்பவரின் மனைவி திருமதி செண்பகதேவி பாரதிபுரத்தில் மின்கசிவு ஏற்பட்டிருந்த மின்கம்பம் அருகே சென்ற போது மின்சாரம் தாக்கியதில் தூக்கி வீசப்பட்டு அருகிலிருந்த தேங்கிய மழை நீரில் விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும், மின்சாரம் தாக்கியதில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் திரு. பன்னீர்செல்வம் மற்றும் திரு. விஜயமணி ஆகிய இருவருக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 50,000/- ரூபாயும் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**